**விரைவு நீதிமன்றம் (ந.வ), உத்தமபாளையம்**

**முன்னிலை: திரு.S.அமலநாத கமலக்கண்ணன், B.A.,B.L.,Hon's.,**
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்,
உத்தமபாளையம்.

2026-ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 24-ஆம் நாள் புதன்கிழமை

**சுருக்குமுறை ஆவண வழக்கு எண்.116/2025**

CNR.No.TNTH080002642025

| | |
|---|---|
| புகார்தாரர் | பா.கணேசன் (வயது 36/2026),<br>த/பெ.பாண்டி,<br>ஆங்கூர்பாளையம் ரோடு,<br>MPM பள்ளி பின்புறம், KTS காளவாசல்,<br>கம்பம்,<br>உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம். |
| எதிரி | ஆ.சந்திரசேகர் (வயது 29/2026),<br>த/பெ.ஆண்டவர்,<br>C/o.தேவராஜ் அம்பிகா மேல்மாடி,<br>இண்டேன் கேஸ் குடோன் அருகில்,<br>கல்கட்டி களம்,<br>நாகமணிமயம்மாள் பள்ளி பின்புறம், கம்பம்,<br>உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம். |
| குற்றம் முறையிட்டது | மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவுகள் 138, 142-ன் கீழ் |
| காசோலை எண். (000001) | 04.02.2025 |
| காசோலை தொகை | Rs.5,00,000/- |
| வசூலுக்கு தாக்கல் செய்த நாள் | 04.02.2025 |
| காசோலை திரும்பிய நாள் | 05.02.2025 |
| காசோலை திரும்பிய காரணம் | Drawer's signature differs |
| அறிவிப்பு அனுப்பிய நாள் | 10.02.2025 |
| அறிவிப்பு பெறப்பட்ட நாள் | 11.02.2025 |
| வழக்கு தாக்கல் நாள் | 18.03.2025 |



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.24 18:32:03 +0530

| தீர்ப்பு நாள் | 24.06.2026 |
|---|---|
| புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் | திரு.G.P.காளியப்பன் |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.K.அஜ்மல்கான் |
| **தீர்வு** | **எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து B.N.S.S பிரிவு 278(1)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.** |

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**தீர்ப்புரை**

**1. புகார்தாரர் வழக்கு சுருக்கம்:**

புகாரதார்ரரும், எதிரியும் நன்கு பழக்கவழக்கம் உள்ள நண்பர்கள். அதன் அடிப்படையில் எதிரி தனது அவசர குடும்ப செலவிற்காகவும், சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும் வேண்டி புகார்தாரரிடம் கைமாற்று கடனாக பணம் கேட்டுள்ளார். புகார்தாரர் கடந்த 05.01.2025ம் தேதி ரூ.5,00,000/–ஐ தனது வீட்டில் வைத்து எதிரிக்கு ரொக்கமாக கொடுத்துள்ளார். அதற்கு ஆதரவாக 04.02.2025 நாளிட்ட 000001 என்ற எண் கொண்ட ESAF Small Finance வங்கி, சின்னமனூர் கிளைக்குரிய ரூ.5,00,000/–த்திற்கான காசோலையை கொடுத்துள்ளார். அந்த காசோலையை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, கம்பம் கிளையில் 04.02.2025ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Drawer's signature differs" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 05.02.2025 அன்று திரும்பியது. காசோலை தொகையை கேட்டு எதிரிக்கு 10.02.2025 நாளிட்டு அனுப்பிய சட்ட அறிவிப்பை 11.02.2025ம் தேதி எதிரி பெற்று கொண்டு, பணம் செலுத்தாமல் இருந்துள்ளார். மேலும் எதிரி காசோலையின் தொகையை செலுத்தாமல் புகார்தாரரை மோசடி செய்து



AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.24 18:32:10 +0530

ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142ன் கீழ் குற்றம் இழைத்துள்ளார் என்பதால் எதிரியை தண்டிக்க வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

**2.** புகார்தாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம், புகார்மனு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணைக்கு உத்தரவிட முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிக்கு பிரிவு 227 B.N.S.S–ன் கீழ் அழைப்பாணையுடன் இணைத்து புகார் நகல் அனுப்பப்பட்டது.

**3.** எதிரி அழைப்பாணையையும், புகார் நகலையும் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரியிடம் B.N.S.S பிரிவு 274–ன் படி குற்றத்தின் சாரம்சம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது "பொய் குற்றச்சாட்டு" என்றும், எதிரி குற்றத்தை மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

4. **புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:**

புகார்தாரர் திரு.கணேசன் தனது புகாரில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது ம.சா.1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி கொடுத்த 04.02.2025–ம் தேதியிட்ட 000001 என்ற எண் கொண்ட ESAF Small Finance வங்கி, சின்னமனூர் கிளைக்குரிய ரூ.5,00,000/–க்கான அசல் காசோலை ம.சா.ஆ.1 என்றும், மேற்படி காசோலை "Drawer's signature differs" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 05.02.2025ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.2 என்றும், மேற்படி காசோலைக்குரிய தொகையை கேட்டு எதிரிக்கு அனுப்பிய 10.02.2025 நாளிட்ட சட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சலக இரசீது அலுவலக நகல் மற்றும் அசல் ம.சா.ஆ.3 என்றும், மேற்படி அறிவிப்பை எதிரி 11.02.2025ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ.4 என்றும், ம.சா.2ன் சாட்சியத்தில், புகார்தாரரின் கையொப்பம் அடங்கிய ஆவணம்



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.24 18:32:16 +0530

ம.சா.ஆ.5 என்றும், புகார்தாரரின் வங்கி பரிவர்த்தனையை ம.சா.ஆ.6 என்று மேற்படி ஆவணங்களை முக்கிய சான்றாவணங்களாக ம.சா.1 மற்றும் ம.சா.2 குறியீடு செய்துள்ளார்கள்.

5. **பிரிவு 351(1)(b) வினா மற்றும் பதில்:**

புகார்தாரர் தரப்பில் விசாரிக்க கூடுதல் சாட்சியம் இல்லை என மேற்குறிப்பு செய்ததால் புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து BNSS பிரிவு 351(1)(ஆ)—ன் கீழ் வினவிய போது புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் சாட்சியம் என்றும், ம.சா.ஆ.1.ஆன காசோலை தன்னுடையதுதான் என்றும், அதிலுள்ள கையொப்பமும் தன்னுடையது இல்லை என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளது என்றும் கூறினார்.

6. சான்றாவணங்கள் மற்றும் இதர வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கருத்தில் எடுத்து கொள்ளப்பட்டது.

7. இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமான மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138—ன் படி சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா ? என்பது தீர்விற்குரிய பிரச்சனையாகும்.

7.1. எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் உட்கூறுகள் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

- முதலில் எதிரி, புகார்தாரருக்கு 04.02.2025—ம் தேதியிட்டு ரூ.5,00,000/—க்கு கொடுத்த ESAF Small Finance வங்கி, சின்னமனூர் கிளைக்குரிய ம.சா.ஆ.1 காசோலையானது உரிய காலத்திற்குள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- மேற்படி காசோலையானது கடந்த 05.02.2025ம் தேதியன்று Drawer's signature differs என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு தமிழ்நாடு



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.24 18:32:22 +0530

மெர்க்கன்டைல் வங்கி, கம்பம் கிளையிலிருந்து திருப்பப்பட்டது என்பது ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- காசோலை திரும்பியது குறித்து 10.02.2025–ம் தேதியன்று புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் உரிய காலத்திற்குள் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளது ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- மேற்படி அறிவிப்பை 11.02.2025–ம் தேதியன்று எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் எதிரி 15 நாட்களுக்குள் பணம் செலுத்தாமல் இருந்ததால் புகார்தாரர் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

7.2. புகார்தாரரின் வழக்கை நிரூபிக்கும் வகையில், ம.சா.ஆ.1 ஆன எதிரியின் தாவா காசோலையை புகார்தாரர் தாக்கல் செய்திருந்தார். மேலும் காசோலை தன்னுடையதுதான் என்று எதிரி ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் காசோலையில் உள்ள கையொப்பமானது தன்னுடையது இல்லை என்பதை நிரூபிப்பதற்கு எதிரி தரப்பில் எவ்வித முயற்சிகளும் எடுக்கவில்லை.

7.3. தாவா காசோலை வங்கியிலிருந்து மறுக்கப்பட்ட பின்னர் புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதனை எதிரி பெற்றுக்கொண்டுள்ளார். ஆனால் எதிரி அவரது தரப்பினை முன்னிலைப்படுத்தி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. மேலும் இவ்வழக்கு சம்மந்தமாக எதிரியிடம் முதல் கேள்வி மற்றும் 351(1)(b)–ன் கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் மறுப்பு தெரிவித்துள்ளார்.

7.4. புகார்தாரரிடமிருந்து எதிரி ரூ.5,00,000/– பணம் வாங்கினார் என்பதை நிரூபிக்கும் வகையில் புகார்தாரர் தாவா காசோலையை தாக்கல் செய்துள்ளார். புகார்தாரருக்கு தாவா காசோலையை எதிரி கொடுக்கவில்லை



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.24 18:32:28 +0530

என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரி தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. ஆகவே காசோலை தொகையை எதிரி பெற்றுள்ளார் என்பது தெரிய வருகிறது.

7.5. இந்நிலையில், புகார்தாரரும், எதிரியும் காசோலை வழக்கு சம்பந்தமாக சமாதானமாக பேசி முடிக்கப்பட்டு எதிரி புகார்தாரருக்கு செலுத்த வேண்டிய தொகையை புகார்தாரர் பெற்று கொண்டுவிட்டபடியால் மேற்படி வழக்கினை மேல் நடத்த விரும்பவில்லை என்று குறிப்பிட்டு பிரிவு 147 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான மனுவை புகார்தாரர் மற்றும் அவரது வழக்கறிஞர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள். புகார்தாரரை விசாரித்தபோது அவர் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்களை உறுதி செய்துள்ளார். காசோலை வழக்குகளில் இருதரப்பினர்களும் சமரசமாக பேசி கொண்டபின்பு எதிரிக்கு தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாகாது என்று முடிவு செய்கிறது. ஆகவே மாற்றுமுறை ஆவணசட்டம் பிரிவு 138–ன் படி எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. <u>முடிவு:</u>

முடிவாக, எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 278(1)–ன் B.N.S.S கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. .

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் ஜீன் மாதம் 24–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.24 18:32:34 +0530

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.**

1. **<u>புகார்தாரர் தரப்பு சாட்சி:</u>**

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.1 | திரு.கணேசன் (புகார்தாரர்) |

2. **<u>புகார்தாரர் தரப்பு சான்றவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.ஆ.1 | 04.02.2025 நாளிட்ட 000001 என்ற எண் கொண்ட ESAF Small Finance வங்கி, கம்பம் கிளைக்குரிய ரூ.5,00,000/-க்கான காசோலை அசல் |
| 2 | ம.சா.ஆ.2 | 05.02.2025 நாளிட்டு Drawer's signature differs என்ற காரணத்தினால் திருப்பப்பட்ட வங்கி குறிப்புரை அசல் |
| 3 | ம.சா.ஆ.3 | 10.02.2025 நாளிட்ட புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக இரசீது அலுவலக நகல் மற்றும் அசல் |
| 4 | ம.சா.ஆ.4 | 11.02.2025 நாளிட்டு அறிவிப்பினை எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் |
| 5 | ம.சா.ஆ.5 | புகார்தாரரின் கையொப்பம் அடங்கிய ஆவணம் |
| 6 | ம.சா.ஆ.6 | புகார்தாரரின் வங்கி பரிவர்த்தனை |

3. **<u>புகார்தாரர் தரப்பு சான்றுபொருள்</u>: இல்லை**

4. **<u>எதிரி தரப்பு சாட்சிகள்:</u>**

| | | |
|---|---|---|
| 1 | எ.சா.1 | திரு.சந்திரசேகர் |
| 2 | எ.சா.2 | திரு.அருண்குமார் |

**<u>5. எதிரி தரப்பு சான்றாவணம்:</u>**

| | | |
|---|---|---|
| 1 | எ.சா.ஆ.1 | 2021லிருந்து புகார்தாரரிடம் எதிரி வரவுசெலவு வைத்து, அவருக்கு எதிரியின் G Pay மூலம் அனுப்பிய ஆவணம் |

**<u>6. எதிரி தரப்பு சான்றுபொருள்: இல்லை</u>**

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.24 18:32:41 +0530

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.**